සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2025
இறுதி தவணைப் பரீட்சை - 2025 / Year End Term Test - 2025

| ශ්‍රේණිය தரம் Grade | 06 | இஸ்லாம் I, II Islam I, II | කාලය நேரம் Time | 2 மணித். |
|---|---|---|---|---|

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

## பகுதி 01

- **மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. மு.்.மின் என்பதன் கருத்து

1.காபிர் 2.முஸ்லிம் 3.இணைவைப்பாளர் 4.விசுவாசி

02. புலனறிவுக்கு அப்பாற்பட்ட அல்லாஹ்வின் படைப்புக்களில் ஒன்று

1.ஜின்கள் 2.பறவைகள் 3.மனிதர்கள் 4.மிருகங்கள்

03. 'மலக்குல் மவ்த்' என அழைக்கப்படுபவர்

1.இஸ்ராபீல் (அலை) 2.இஸ்ராயீல் (அலை) 3.மாலிக் (அலை) 4.ஜிப்ரீல் (அலை)

04. தொழுகையில் ஒரு பர்ளான செயலை வேண்டுமென்றே விட்டுவிடுதல்

1.ஷர்த் 2.ஸுன்னத் 3.முப்திலாத் 4.முனாகஹாத்

05. முஷ்ரிக்குகள் எனப்படுவோர்

1.நம்பிக்கை கொண்டோர் 2.துரோகம் செய்தோர்
3.இணைவைப்போர் 4.பாவம் செய்தோர்

06. ஸுறதுல் தௌஹீத் என அழைக்கப்படுவது

1.ஸுரதுல் பலக் 2.ஸுரதுல் பீல் 3.ஸுரதுன் நாஸ் 4.ஸுரதுல் இஹ்லாஸ்

07. நபி(ஸல்) அவர்கள் கி.பி எத்தனையாம் ஆண்டு பிறந்தார்கள்

1.கி.பி 571 2.கி.பி 572 3.கி.பி 574 4.கி.பி 581

08. சுவர்க்கத்து பெண்களின் தலைவி

1.ஆயிஷா (ரழி) 2.கதீஜா (ரழி) 3.ஹப்ஸா (ரழி) 4.பாத்திமா (ரழி)

09. ஆதம்(அலை) அவர்களின் மரணத்துக்குப் பின்னர் நபியான அவரது மகன்

1.நூஹ் (அலை) 2.இத்ரீஸ் (அலை) 3.ஷீது (அலை) 4.இப்றாஹீம் (அலை)

10. நபி(ஸல்) அவர்களுக்கு முதல் வஹி இறங்கிய இடம்

1.தௌர் குகை 2.உஹத் மலை 3.ஹிராக் குகை 4.ஜபலுர் ரஹ்மா

Past Papers Wiki

11. ஸல்மானுல் பாரிஸி (ரழி) எந்த நாட்டை சேர்ந்தவர்

1.எகிப்து 2.ஜோர்தான் 3.பாரசீகம் 4.மக்கா

12. ஒரு முஸ்லிமை இறைநிராகரிப்பில் இருந்து வேறுபடுத்திக்காட்டுவது

1.தொழுகை 2திக்ர் 3.நோன்பு 4.ஸக்காத்

13. தமது தேவைகளை விட முஹாஜிரீன்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியோர்

1.ஸஹாபாக்கள் 2.அஹ்லுல் பைத்க்கள்
3.அஹ்லுல் கிதாப்கள் 4.அன்ஸாரீகள்

14. அல்குர்ஆன் வசனங்கள் தொடர்ந்து எத்தனை வருடங்களாக அருளப்பட்டு நிறைவு பெற்றன

1. 23 வருடங்கள் 2. 20 வருடங்கள் 3. 18 வருடங்கள் 4. 25 வருடங்கள்

15. நபி(ஸல்) அவர்களின் எப்பயணத்தின் போது மனித மாமிசத்தை புசிப்பவர்களைக் கண்டார்கள்

1.இஸ்ரா 2.மி.ஃறாஜ் 3.ஹிஜ்ரத் 4.தாயிப்

16. ஒவ்வொரு மேய்ப்பாளனும் தனது மேய்ப்பு பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவான்

1.அல்லாஹ்வின் கூற்று 2.ஸஹாபாக்களின் கூற்று
3.நபியவர்களின் கூற்று 4.இமாம்களின் கூற்று

17. ஆமுல் ஹுஸ்ன் எனப்படும் ஆண்டு

1.நுபுவத் 10 2.நுபுவத் 12 3.நுபுவத் 09 4.நுபுவத் 13

18. நபி (ஸல்) அவர்களின் பாட்டன்

1.அப்துல்லாஹ் 2.அப்துல்முத்தலிப் 3.அபுதாலிப் 4.அப்து மனாப்

19. நோன்பின் பர்ளுகள்

1. 6 2. 5 3. 2 4. 12

20. உம்மீ என்றால்

1.உண்மையாளர் 2.நம்பிக்கையாளர்
3.எழுத வாசிக்கத் தெரியாதவர் 4.அன்பானவர்

**(2x20=40 புள்ளிகள்)**

Past Papers Wiki

## பகுதி 02

- **முதலாம் வினா உட்பட மொத்தமாக 05 வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1. மஆத் என்றால் என்ன?
2. ஜிப்ரீல் (அலை) அவர்களின் சிறப்புப் பெயர்களை குறிப்பிடுக.
3. நீரின் வகைகளை குறிப்பிடுக.
4. ஆயிஷா நாயகியின் சிறப்புப் பெயர்களை குறிப்பிடுக.
5. கதீஜா (ரழி) அவர்களின் உறவினரும் முன்னைய வேதங்களை நன்கறிந்தவரும் யார்?
6. உம்மஹாதுல் மு.ஃமினீன் என்றால் என்ன?
7. சிறுவர் முஹம்மதிடம் நுபுவத்தின் அடையாளங்களைக் கண்ட கிறிஸ்தவ மதகுரு யார்?
8. ஹதீஸ் என்றால் என்ன?
9. வுழு செய்த பின் ஓதும் துஆவை தமிழில் எழுதுக.
10. மனிதர்களுக்கும் ஜின்களுக்குமான வேறுபாடுகள் 02ஐ குறிப்பிடுக.

**(2x10=20 புள்ளிகள்)**

**02.**

1. உள்ளத்தை அசுத்தப்படுத்தும் காரணிகள் 03ஐ குறிப்பிடுக.
2. அவற்றில் இருந்து உள்ளத்தை தூய்மைபடுத்தும் நல்லமல்கள் 4ஐ குறிப்பிடுக.
3. நஜீஸின் வகைகளைக் குறிப்பிடுக.

**(3+4+3=10 புள்ளிகள்)**

**03.**

1. தொழாதவர் நுழையும் நரகத்தின் பெயரைத் தருக.
2. தொழுகையை பேணாதவர்கள் யாவருடன் எழுப்பப்படுவார்கள்?
3. தொழுகை பற்றி ஹதீஸ் ஒன்று தருக.
4. தொழுகையின் முப்திலாத்கள் 2ஐக் குறிப்பிடுக.

**(2+4+2+2=10 புள்ளிகள்)**

**04.**

1. அயலவர்களின் வகைகளைக் குறிப்பிடுக.
2. ஈமானின் தாழ்ந்த நிலை எது?
3. பாத்திமா (ரழி) அவர்களின் குணப்பண்புகள் 3ஐக் குறிப்பிடுக.
4. ஸைத் பின் ஸாபித் (ரழி) கற்றுக் கொண்ட மொழிகள் 2 தருக.

**(3+2+3+2=10 புள்ளிகள்)**

**05.**

1. நபி (ஸல்) அவர்களின் பெண்பிள்ளைகள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. உம்மஹாதுல் மு.ஃமினீன்களில் 4 பேரின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. ஸுரா பலக் எவ்வகையான தீங்குகளிருந்து பாதுகாப்பு தேடுமாறு வேண்டுகின்றது?

**(2+4+4=10 புள்ளிகள்)**

**06.**

1. காபிர்கள் நபி (ஸல்) அவர்களையும் அவர்களது குடும்பத்தினர்களையம் தடுத்து வைத்த இடம்?
2. 'தாஹிரா' என்றால் என்ன?
3. அல்குர்ஆனின் வேறு பெயர்கள் 3ஐக் குறிப்பிடுக.
4. நீர் பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்கிய சந்தரப்பங்கள் 3ஐக் குறிப்பிடுக.

**(2+2+3+3=10 புள்ளிகள்)**

**07.**

1. நபியவர்களின் சிறிய தந்தை இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. அபுல் பஷர் என்றால் என்ன?
3. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் எவை?
4. அல்குர்ஆன் ஓதும் முன் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குகள் 4ஐக் குறிப்பிடுக.

**(2+2+2+4=10 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank